மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி
புலமைப்பரிசில் பரீட்சை- 2020
பயிற்சி வினாப்பத்திரம் இலக்கம் 06
பகுதி 1 நேரம் 45 நிமிடம்

➢ 1,2 ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.


1)



1) 

2) 

3) 


2) 

1) 

2) 

3) 


➢ 3,4 ஆகிய வினாக்களில் தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை அந்த இரண்டு உருக்களும் எவை?

3) 

1) X உடன் Y உம்

2) X உடன் Z உம்

3) Y உடன் Z உம்


4) 

1)A யும் B யும்

2) B யும் C யும்


3) A யும் C யும்

5) உருவில் இருந்து வெட்டி எடுக்கக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?



(1) 6 (2) 5 (3) 4

6) கீழே தரப்பட்டுள்ள உருக்களை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்?






இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) BD, AE, CF 2) BE, AD,,CF 3) AB, CE, DF

www.ikedu.lk

7. பின்வரும் உருக்களில் அதிகமான நேர்கோடுகள் பயன்படுத்தப்பட்ட உரு எது?

1)  2)  3) 

8. 

மேலுள்ள படத்தின் படி மிகச் சரியான தொடர்பு

1)  2)  3) 

9. வாரம் ஒன்றில் சனி தொடக்கம் புதன் வரை எத்தனை நாட்கள்?

1) 6 2) 5 3) 4

10. ராணியை விட மகேஸ் உயரம் கூடியவள். ரதி ராணியை விட உயரம் கூடியவள். எனினும் மகேஸை விட உயரம் குறைந்தவள் எனின் மூவரிலும் உயரம் குறைந்தவர் யார்?

1) ராணி 2) மகேஸ் 3) ரதி

11. தேவி வரிசை ஒன்றில் முன்னாலிருந்து ஏழாவதாகவும் சுமன் பின்னால் இருந்து பத்தாவதாகவும் உள்ளனர். அவர்களுக்கிடையில் 5 பேர் நிற்கின்றனர் எனின் அவ்வரிசையில் எத்தனை பேர் உள்ளனர்?


1) 21 2) 22 3) 25


12. 1 தொடக்கம் 10 வரையுள்ள எண்களின் கூட்டுத்தொகை $11 \times 5 = 55$ ஆகும். 1 தொடக்கம் 20 வரையுள்ள எண்களின் கூட்டுத்தொகை $21 \times 10 = 210$ ஆகும்.


1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களின் கூட்டுத்தொகை யாது?


1) 5100 2) 5050 3) 5151

➢ முதலில் தரப்பட்டுள்ளவை ஒரு உருவை மேலிருந்து பார்க்கும் போது தோற்றமளிக்கும் விதமாகும். அதற்குப் பொருத்தமான திண்ம உருவைத் தெரிந்து கோடிடுக.

13. 




14. 




www.ikedu.lk

15. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



1) 4
2) 3
3) 2

16. 


வட்டங்களுக்குள் எண்கள் இடப்பட்டுள்ள முறைக்கு ஏற்ப வெற்றிடத்துக்குரிய விடையைத் தெரிவு செய்க.

1) 4 2) 7 3) 10

17. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


ஜனவரி – ஏப்ரல் எனின், திங்கட் கிழமை –..... ஆகும்.

1) வியாழக்கிழமை 2) சனிக்கிழமை 3) வெள்ளிக்கிழமை

18. 

பின்வரும் உருக்களில் உள்ள மெழுகுவர்த்திகள் எரியும் இயல்புக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தினால் சரியான ஒழுங்கைக் கொண்ட ஆங்கில எழுத்துக்கூட்டம் எது?

1) $CABD$ 2)$DBCA$ 3)$ADBC$

19. 

கடிகாரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்திற்கு 2 மணித்தியாலம் 40 நிமிடங்களுக்குப் பின்னர் நேரம் யாது?

1) 3.15 2) 3.05 3) 2.50

20. இன்று வெள்ளிக்கிழமை ஆகும். நேற்று முன்தினம் ஏப்ரல் 8 ஆம் திகதி எனின் ஏப்ரல் 15ஆம் திகதி என்ன நாள்?

1) வியாழன் 2) புதன் 3) வெள்ளி

21. கோழிப் பண்ணை ஒன்றில் 20 கோழிகளுக்கு 5 நாட்களுக்குப் போதுமான கோழித் தீன் உள்ளது. இக்கோழித்தீன் 5 கோழிகளுக்கு எத்தனை நாட்களுக்கு போதுமானதாகும்?

1) 10 2) 20 3) 100



22. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.

$7 \square 6 = 48 \square 6$

1) +,× 2) ×, ÷ 3) ×, –

www.lkedu.lk


23. ரதி தனது வீட்டிலிருந்து கடைக்குச் செல்வதற்கு முதலில் தெற்கு திசை நோக்கிச் சென்று பின்னர் அங்கிருந்து வடகிழக்கு திசையில் சென்று பின்னர் அங்கிருந்து கிழக்கு திசையில் சென்று கடையை அடைந்தாள். அவளது பயணப் பாதையை தெரிவு செய்க.



1) 
2) 
3) 

24. ஒரு பொருளின் விலை ரூபா PRI.RM எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனின் அப்பொருளின் விலை யாதாக இருக்கலாம்?

1) ரூபா 520.30 2) ரூபா 540.45 3) ரூபா 540.30

25. இவ்வுருவை மடித்து ஒரு சதுரமுகியைச் செய்யும் போது அது தோன்றும் விதம் யாது?



1) 
2) 
3) 

26. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் 5 நீல நிற பொத்தான்களும் 4 சிவப்பு நிற பொத்தான்களும் 3 மஞ்சள் நிற பொத்தான்களும் உள்ளன. கட்டாயம் ஒரு மஞ்சள் நிற பொத்தானை பெறுவதற்கு எத்தனை தடவை எடுக்க வேண்டும்.

1) 9 2) 10 3) 8

27. 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை எனின் அவ்வருடத்தின் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி என்ன கிழமையாகும்?

1) செவ்வாய்க்கிழமை 2) வியாழக்கிழமை 3) புதன்கிழமை

28. 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி புதன் கிழமை எனின் 2014ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி என்ன கிழமையாகும்

1) புதன் 2) செவ்வாய் 3) வியாழன்

29. தொடர்பினை அவதானித்து சரியான விடையினைத் தெரிந்து கோடிடுக.

காகிதம் → வைக்கோல் எனின், பருத்தி → .....

1) தொழிற்சாலை 2) பஞ்சு 3) பட்டு

30. 1975ஆம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டின் எத்தனையாம் தசாப்தத்திற்குரியதாகும்?
1) 20ஆம் நூற்றாண்டின் 8ஆம் தசாப்தத்திற்குரியது.
2) 21ஆம் நூற்றாண்டின் 7ஆம் தசாப்தத்திற்குரியது.
3) 17ஆம் நூற்றாண்டின் 5ஆம் தசாப்தத்திற்குரியது.

31. காலை வேளையில் ஒருவர் தெற்கு நோக்கிச் செல்கின்றார் எனின் அவரின் நிழல் எப்பக்கம் விழும்?

1) வலது 2) இடது 3) பின்னால்


www.ikeau.lk

32. ஒரு அதிசயக் கூடையிலுள்ள பூக்கள் ஒவ்வொரு நிமிடமும் இரட்டிப்பாகும். ஒரு மணித்தியாலத்தில் அக்கூடை நிரம்பி விட்டால் அக்கூடையின் அரைவாசி எப்போது நிரம்பியிருக்கும்?


1) 52 நிமிடம் 2) 59 நிமிடம் 3) 48 நிமிடம்

- அம்புக்குறி காட்டும் திசையில் இருந்து பார்க்கும் போது தோற்றமளிக்கும் விதத்தினைக் காட்டும் விடையினைத் தெரிந்து கோடிடுக.

33.



34.



35. சங்கரின் சட்டைப்பையில் மூன்று வகையான 9 நாணயங்கள் இருக்கின்றன. அவற்றின் மொத்தம் ரூபா 24 ஆகும் எனின் சங்கரின் பையில் இருக்கும் நாணயங்கள் எவை?

1) ரூபா 5 நாணயத்தில் 2 , ரூபா 2 நாணயத்தில் 4 , ஒரு ரூபாய் நாணயத்தில் 3
2) ரூபா 5 நாணயத்தில் 3 , ரூபா 2 நாணயத்தில் 2 , ஒரு ரூபாய் நாணயத்தில் 4
3) ரூபா 5 நாணயத்தில் 3 , ரூபா 2 நாணயத்தில் 3 , ஒரு ரூபாய் நாணயத்தில் 3

36. மூன்று எண்களின் சராசரி 124 ஆகும். அவற்றுடன் 60 ஐக் கூட்டினால் வரும் எண் யாது?

1) 459 2) 432 3) 464

37. சத்யாவின் சகோதரிகளில் ஒருவர் பத்திராதிபர். சத்யாவின் ஒரு தம்பி ஆசிரியர். ஆகவே சத்யாவுக்கு இரண்டு சகோதரர்கள் என்பது,

1) சரி 2) பிழை 3) கூறமுடியாது.

38. பெட்டி ஒன்றினுள் தும்பிகளும், சிலந்திகளும் இருந்தன. அவற்றை ஒரு மாணவன் கணக்கிட்ட போது 21 உயிரினங்களும் அவற்றுக்கான கால்கள் 156 உம் காணப்பட்டன எனின் அங்கு காணப்பட்ட தும்பிகள் எத்தனை?

1) 6 2) 15 3) 11

39. இத்தாலி ஒரு பணக்கார நாடாகும். இதிலிருந்து விலங்கிக் கொள்வது?

1) இத்தாலியில் உள்ள ஒவ்வொருவரும் செல்வந்தர்கள்
2) இத்தாலி ஒரு வறிய நாடு அல்ல.
3) இத்தாலியில் உள்ள அனைவரும் வறியவர்கள், நாடு பணக்கார நாடு

40) பின்வரும் பாடலை வாசித்து வினாவுக்குரிய விடையைத் தெரிந்து கோடிடுக.

அன்புக் குட்டிச் செல்வங்களே
தோட்டம் வளர்ப்போம் வீட்டினிலே
வீரிய உரங்களை சேர்க்காமல்
இயற்கைப் பசளையைச் சேர்த்திடுவோம்

பாடலில் 'மனை' என்பதற்குப் பொருத்தமான சொல் உள்ளது. அது யாது?

1) செல்வம் 2) வீடு 3) உரம்

www.lkedu.lk

மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி
புலமைப்பரிசில் பரீட்சை- 2020
பயிற்சி வினாப்பத்திரம் இலக்கம் 06

பகுதி 2 நேரம் 1 மணி 15 நிமிடம்

சகல வினாக்களுக்கும் விடை தருக

1. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்குப் பந்தியிலிருந்து தெரிவு செய்து விடை எழுதுக.

இன்று உலகளாவிய ரீதியில் பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளது. பிளாஸ்டிக்கைத் தமிழில் 'நெகிழி' என்பர். இவை பன்முகப் பாவனை உடையவை. மலிவானவை. நீண்டகாலம் பாவிக்கக்கூடியவை. இவை போன்ற காரணங்களால் அதிகமானோர் பயன்படுத்துகின்றனர். இதனால் சூழல் வேகமாக மாசடைகின்றது. இதுமட்டுமன்றி பொலித்தீனை நாம் உண்ணும் உணவுகளோடு மிருகங்களும் பறவைகளும் சேர்ந்து உண்பதால் அவையும் பாதிக்கப்படுகின்றன. பொலித்தீனை எரிப்பதால் சூழல் மாசடைந்து ஓசோன் படலமும் பாதிப்படைகின்றது. ஆகவே நாம் வாழும் சூழலை பொலித்தீன், பிளாஸ்டிக் அற்றதாக பாதுகாப்பது எமது கடமையாகும்.

1. 'ஆகாரம்' என்பதன் ஒத்தகருத்துச் சொல் எது? .....
2. பிளாஸ்டிக்கைத் தமிழில் எவ்வாறு அழைப்பர்? .....
3. பந்தியிலுள்ள அ.ஃறிணைப் படர்க்கைப் பன்மைச் சொல் எது? .....
4. இதில் உள்ள இடப்பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக. .....
5. 'பாதிப்படைகின்றன' என்ற சொல்லைப் பிரித்து எழுதுக. .....
6. பொலித்தீனை மக்கள் ஏன் விரும்பிப் பயன்படுத்துகின்றனர்? .....
7. உயர்திணை தன்மை பன்மைப் பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக. .....
8. அ.ஃறிணை நிகழ்கால ஒருமை வினைச் சொல் ஒன்றினை எழுதுக. .....
9. 'கடமையானது' என்ற வினைச்சொல்லின் எதிர்காலச் சொல்லை எழுதுக. .....
10. 'பட்சிகள்' என்பதன் ஒத்தகருத்துச் சொல் எது? .....

2. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.

1. மனிதனுக்குப் பல விலங்குகள் உதவி புரிகின்றன

2. பாறையில் குரங்கு மான் சிங்கம் முயல் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன

3. தரப்பட்ட பழமொழிக்கான கருத்துக்களை எழுதுக.

1) பதறாத காரியம் சிதறாது. .....

2) அழுத பிள்ளை பால் குடிக்கும். .....

4. **பின்வரும் மரபுச் சொற்களுக்கான கருத்துக்களை எழுதுக.**

1) வாய் காட்டுதல் .....

2) கண் வளர்தல் .....

www.ikedu.lk

5. சொற்களை ஒழுங்கு படுத்தி சரியான வாக்கியமாக எழுதுக.

1) உடலைச் / நாம் / வைத்திருப்பது / அவசியம் / நமது / சுத்தமாக

.....

2) பிடித்துக் /நிலத்தில் / மண்வெட்டி/கொத்தினான் / இறங்கி

.....

6. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1) இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ..... காரியம் ஆகும். (அரிய, அறிய)

2) கமல் பூங்காவில் உள்ள ..... (புல்தரையில், புற்றரையில்) விளையாடினான்.

7. பொருத்தமான இணைமொழிச் சொற்களை வெற்றிடத்தில் எழுதுக.

விருப்பு வெறுப்பு, ஏற்ற இறக்கம், அருமை பெருமை, அங்குமிங்கும், கங்குகரை

1) ஆசிரியரின் .....களை அதிபர் எடுத்துரைத்தார்.

2) ஒருவனது வாழ்விலே .....மாறி மாறி வரும்.

8. கருத்துப் புலப்படும் வகையில் வாக்கியம் அமைக்குக.

1) கலகல: .....

2) சலசல: .....

9. வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.

1) எந்நன்றி ..... உய்வுண்டாம் ..... கொன்ற மகற்கு.

2) இன்னா ..... அவர் நாண ..... செய்து விடல்.

10. கண் , கிளை , இலை என்பன எவ்வகையான பெயர்ச்சொற்களாகும். .....

11. தரப்பட்ட வினாவுக்கு உங்களால் கூறப்படும் பதிலை ஆங்கிலத்தில் எழுதுக.

1) *What is your name?* .....

2) *How old are you?* .....

12. தமிழ் கருத்தை எழுதுக.

1) *Please give me a piece of chalk.* .....

2) *I am thirsty.* .....

13. சிங்களச் சொல்லை எழுதுக.

1) ஆடு ..... 2) தும்புத்தடி .....

www.ikeau.lk

14. சிங்களச் சொல்லின் தமிழ் கருத்தை எழுதுக.

1) ஹெமோம வாடிவென்ன .....

2) பந்திபார குருத்துமா எனவா.....

15. தரப்பட்டுள்ள வாக்கியத்தை சிங்களத்தில் கூறும் விதத்தை தமிழில் எழுதுக.

01. மேலே பாயுங்கள் : .....

- **தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக**

16. சுற்றுலாவிற்கு சென்ற மாணவர்களின் எண்ணிக்கை 171 ஆகும். ஒரு பேருந்தில் 50 பேர் பயணம் செய்ய முடியும் எனின் சுற்றுலாவிற்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தின் எண்ணிக்கை யாது?

.....

17. கூடையொன்றில் $2kg$ $650g$ நிறையுடைய மாவும் $3kg$ $150g$ நிறையுடைய சீனியும் இருந்தன. அவற்றின் மொத்த நிறை யாது? .....

18. ரூபாய் 98.00 பெறுமதியுள்ள பொருளை வாங்கிய பின் வியாபாரியிடம் 100.00 யும் ரூபாய் 8.00 இனையும் கொடுத்தார் எனின், கிடைக்க வேண்டிய மீதிப்பணம் யாது?.....

19. $200g$ உருளைக்கிழங்கின் விலை ரூபா 16 ஆகும். $\frac{1}{2}$ l தேங்காய் எண்ணெயின் விலை ரூபா 140 ஆகும். $1250g$ உருளைக்கிழங்கும் 1.5 l தேங்காயெண்ணையும் வாங்குவதற்கு தேவையான பணத்தொகை யாது? .....

20. பாத்தியொன்றில் 6 தக்காளி கன்றுகள் வீதம் 150 பாத்திகளில் நடுவதற்குத் தேவையான தக்காளிக்கன்றுகளின் எண்ணிக்கை யாது? .....

21. பி.ப. 1.30 இற்கு வரவேண்டிய புகையிரதம் 35 நிமிடங்கள் பிந்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது எனின் புகையிரதம் வந்தடையும் நேரம் யாது? .....

22. தோட்டமொன்றில் 4520 மிளகாய்க் கன்றுகள் நாட்டப்பட்டிருந்தன. அவற்றினை 5 கன்றுகளுக்கு ஒரு பாத்தி வீதம் கட்டப்பட்டு நீர் பாய்ச்சப்பட்டன எனின். அத்தோட்டத்தில் எத்தனை பாத்திகள் கட்டப்பட்டுள்ளன? .....

23. 2019ஆம் ஆண்டில் தை, மாசி, பங்குனி, சித்திரை ஆகிய நான்கு மாதங்களிலும் உள்ள நாட்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....


24. ரோஜாவினதும் சரோஜாவினதும் வீடானது பாடசாலையில் இருந்து மேற்குத் திசையில் உள்ளது. ரோஜாவின் வீடு பாடசாலையிலிருந்து $2km$ $250m$ தொலைவிலும் சரோஜாவின் வீடு பாடசாலையிலிருந்து $6km$ 30 m தொலைவிலும் உள்ளது எனின், ரோஜாவின் வீட்டிற்கும் சரோஜாவின் வீட்டுக்கும் இடையிலான தூரம் யாது? .....

www.ikedu.lk

25. பாடசாலை நூலகத்திற்கு கதைப் புத்தகங்கள் வழங்கும் போது முதல் கட்டமாக 450 புத்தகங்களும் இரண்டாம் கட்டமாக முதல் கட்டத்தில் அரைவாசியுடன் 75 புத்தகங்கள் அதிகமாகக் கொடுக்கப்பட்டன. இரண்டு கட்டத்திலும் கொடுக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை யாது?.....


26. ஐம்பதாயிரத்து பதினைந்து இவ்வெண்ணை இலக்கத்தில் எழுதுக .....

27. இவ்வுருவின் கால் பங்கை நிழற்றிக் காட்டுக.




28. சுருக்குக. $\frac{3}{8} + \frac{1}{4} =$ _____

29. நிறந்தீட்டப்பட்ட பகுதி எத்தனை சதுரங்கள் ஆகும்?




.....

30. இவ்வுருவினுள்ளே உள்ள செங்கோணங்கள் எத்தனை?




.....


31. சூரிய நமஸ்காரத்தில் 2ம் படி யாது?



2)



3)



32. இலங்கையில் புனித வெள்ளரசு மரம் காணப்படும் இடம் எது?

1) அநுராதபுரம் 2) கண்டி 3) அம்பாந்தோட்டை

33. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் சரியான ஒழுங்கு முறையாக அமைவது எது?

1) மனதைத் தளர்த்துதல், மனவுறுதி, மலர்வு, பிரார்த்தனை, உடலைத் தளர்த்துதல்.
2) உடலைத் தளர்த்துதல், மனதைத் தளர்த்துதல், மனவுறுதி, மலர்வு, பிரார்த்தனை.
3) உடலைத் தளர்த்துதல், மனதைத் தளர்த்துதல், மனவுறுதி, மலர்வு, பிரார்த்தனை.

www.ikedu.lk

34. இலங்கையின் மிகப் பெரிய மாவட்டம் எது?

1) கொழும்பு 2) அநுராதபுரம் 3) பொலன்னறுவை

35. நாருரு வேரைக் கொண்ட தாவரம் எது?

1) மிளகாய் 2) தக்காளி 3) சோளம்

36. வித்து ஒன்று முளைக்கும் போது முதலில் வெளிவருவது எது?

1) குருத்து 2) முளைவேர் 3) வித்திலை

37. இலங்கை நாட்டிற்குரிய பறவை இனங்களில் ஒன்று எது?

1) மரங்கொத்தி 2) செண்பகம் 3) நரைப்புழுனி

38. மயிர் போன்ற அமைப்பைக் கொண்ட பறவையினம் எது?

1) கிவி 2) வௌவால் 3) புறா



படத்தில் காட்டப்பட்டுள்ள கடல் வாழ் பிராணி எது?

1) முதலை 2) பிளாற்றிப்பஸ் 3) கடற்பசு

39. இரும்புச்சத்துக் குறைப்பாட்டால் ஏற்படும் நோய் எது?

1) குருதிச்சோகை 2) பெரிபெரி 3) ஸ்கேவி

40. உடல் வளர்ச்சிக்கு உதவும் போசணைக்கூறு எது?

1) காபோவைதரேற்று 2) உயிர்ச்சத்துக்கள் 3) புரதம்

41. காற்றின் மூலம் பரவலடையும் வித்து எது?

1) முருங்கை 2) காசித்தும்பை 3) எருக்கலை


42. உள்ளூர் தபால்களை இடும் தபால் பெட்டியின் நிறம்

1) பச்சை 2) வெள்ளை 3) நீலம்

43. இச் செயற்பாடு,

1) யானை நடை 2) வாத்து நடை

3) புழுனி நடை



44. பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணி எது?

1) வண்டு 2) வண்ணத்துப்பூச்சி 3) வெட்டுக்கிளி

45. நடுவதற்கு உகந்த வித்தில் இருக்க வேண்டிய இயல்பு,




1) முதிராத வித்தாக இருத்தல்.

2) வித்தின் நிறம் மாறியிருத்தல்

3) உள்ளீடு நிறம்பியதாகவும் பளபளப்பாகவும் இருத்தல்.

www.ikedu.lk

46. தச்சன் பயன்படுத்தும் உபகரணம்

1) 
2) 
3) 

47. கொழும்பு முகத் பிரதேசக் கடலில் விழுவது?

1) களனி கங்கை 2) களுகங்கை 3) தெதுறு ஓயா

48. தெறியோட்டை தைப்பதற்கு பயன்படுத்தும் தையல் எது?

1) நரம்புத்தையல் 2) விஸ்பத்தையல் 3) கம்பளித்தையல்

49. பண்டிகைகளின் போது கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல் செய்பவர்கள் யார்?

1) தமிழர் 2) சிங்களவர் 3) முஸ்லிம்கள்

50. இலங்கையின் உயர்ந்த நிலத்தையும் தாழ்ந்த நிலத்தையும் காட்டும் படத்தில் உயர்ந்த நிலம் தீட்டப்பட்டிருக்கும் நிறம்,

1) கபில நிறம் 2) மஞ்சள் நிறம் 3) பச்சை நிறம்

51. எரிந்து கொண்டிருக்கும் தணல் உள்ள நெருப்பில் காய்ந்த உப்புக் கட்டியை இடும் போது நடைபெறுவது,

1) உப்புக்கட்டி சத்தத்துடன் வெடிக்கும் 2) உப்புக்கட்டி எரியும் 3) உப்புக்கட்டி உருகுதல்

52. காந்தத் துண்டை நோக்கி கவரப்படும் பொருள் சோடி


1) இரும்பும் அலுமினியமும் 2) இரும்பும் உருக்கும் 3) பித்தளையும் இரும்பும்

53. நீர் கொண்ட பாத்திரமொன்றில் பனிக்கட்டியை இட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் பார்க்கும் போது,

1) நீர் மட்டம் மாறாதிருத்தல்
2) பனிக்கட்டி மிதக்கும்
3. பனிக்கட்டி உருகி நீர் மட்டம் அதிகரிக்கும்.

54. தரம் 5 மாணவர்கள் ஊசித்துளைக் கமரா ஒன்றினைத் தயாரித்து திரையில் தோன்றிய விம்பத்தை அவதானித்தனர். இதிலிருந்து அவர்கள் ஊசித்துளைக் கமராவின் விம்பம் தொடர்பாக விளங்கக் கூடியது யாது?

1) உருச்சிறுத்தது, தலைகீழானது, உண்மையானது.
2) உருப்பெருத்தது, தலைகீழானது, உண்மையானது.
3) உருச்சிறுத்தது, நிமிர்ந்தது, உண்மையானது.



55. ஆரம்ப காலங்களில் வயலை உழுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணம் எது?

1) மட்டப்பலகை 2) துலா 3) கலப்பை

www.ikedu.lk

56. பிரபல எழுத்தாளராகவும் வானியல் விஞ்ஞானியாகவம் உலகிற்குச் சிறந்த சேவையாற்றியவர்

1) சேர். டீ.பி.ஜயதிலக 2) தீபிகா சண்முகம் 3) சேர்.ஆதர்.சி.கிளார்க்

57. சமூக விரோதச் செயற்பாடுகளில் ஒன்று,

1) நாட்டில் உள்ள சட்டத்திட்டங்களை மதித்து நடத்தல்.
2) போதை வஸ்து கடத்துதல்.
3) பாடசாலை சொத்துக்களை பாதுகாத்தல்.

58. வேலையை இலகுவாக்கும் பொறியையம் அப்பொறியுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டையும் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) கப்பி → தள்ளுதல்
2) திருகாணி செலுத்தி → இழுத்தல்
3) கைவண்டி → தள்ளுதல்

59. பின்வருவனவற்றுள் குழு விளையாட்டு எது?

1) எல்லே அடித்தல் 2) தட்டெறிதல் 3) ஈட்டி எறிதல்

60. உமது வீட்டிற்கு புதிதாக ஓர் விருந்தினர் வந்த வேளையில்..... இதனை தொடர்ந்து மூன்று வாக்கியங்கள் எழுதுக.

ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை இயைபு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

1)
.....

.....

2)
.....

.....

3)
.....

.....

www.lkedu.lk

மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி
புலமைப்பரிசில் பரீட்சை- 2020
பகுதி 1 விடைப்பத்திரம் பரீட்சை இல 6

1) 3
2) 1
3) 2
4) 3
5) 3
6) 1
7) 1
8) 2
9) 2
10) 1
11) 2
12) 3
13) 2
14) 2
15) 3
16) 1
17) 1
18) 1
19) 2
20) 2
21) 2
22) 3
23) 2
24) 2
25) 1
26) 2
27) 3
28) 2
29) 2
30) 1
31) 1
32) 2
33) 1

www.lkedu.lk

34) 3

35) 3

36) 2

37) 3

38) 1

39) 2

40) 2

பகுதி 2

1. 1) உணவு

   2) நெகிழி

   3) மிருகங்கள்/பறவைகள்

   4) சூழல்

   5) பாதிப்பு அடைகின்றன.

   6) மலிவானவை, நீண்டகாலம் பாவிக்கக்கூடியவை/பன்முகப்பாவனை உடையவை

   7) நாம்

   8) மாசடைகின்றது/பாதிப்படைகின்றது.

   9) கடமையாகும்.

   10) பறவைகள்

2. 1) மனிதனுக்குப் பல விலங்குகள் உதவி புரிகின்றன.
   2) பாறையில் குரங்கு, மான், சிங்கம், முயல் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன.

3. 1) அவசரப்படாமல் செய்யப்படும் விடயம் வீணாகாது
   2) முயற்சி செய்தால் பலன் கிடைக்கும்.

4. 1) வாய் காட்டுதல்: - எதிர்த்து பேசுதல் 2) கண் வளர்தல்: - நித்திரை செய்தல்

5. 1) நாம் நமது உடலைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம்.
   2) நிலத்தில் இறங்கி மண்வெட்டி பிடித்துக் கொத்தினான்.

6. 1) அரிய 2) புற்றரையில்

7. 1) அருமை பெருமை 2) ஏற்ற இறக்கம்

8. கருத்து புலப்படும் வகையில் வாக்கியங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

9. 1) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு.
   2) இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்.

10. சினைப்பெயர்ச் சொற்கள்

11. 1) My name is ..... / I'm .....

    2) I'm ..... years old.

12. 1) தயவு செய்து ஒரு வெண்கட்டித் துண்டு தாருங்கள்.
    2) எனக்கு தாகமாக இருக்கிறது.

www.lkedu.lk

13. ஆடு : எலுவா 2) தும்புத்தடி : கொஸ்ஸ

14. 1) எல்லோரும் இருங்கள்/உட்காருங்கள்/அமருங்கள்
    2) வகுப்பாசிரியர் வருகிறார்.

15. **உட பனின்ன**

16. 1) 4 பேருந்துகள்

17. 2) $5kg$ $800g$

18. ரூ.10

19. ரூ. 520

20. 900 கன்றுகள்

21. பி.ப. 2.05 / $1405h$

22. 904 பாத்திகள்

23. 120 நாட்கள்

24. $3km$ $780m$

25. 750 புத்தகங்கள்

26. 50015

27. உருவின் 1/4 பங்கு நிறந்தீட்டிக் காட்டப்பட்டிருக்க வேண்டும்.

28. சுருக்குக. 5/ 8

29. 4 சதுரங்கள்

30. 6 செங்கோணங்கள்

31. 1

32. 1. அநுராதபுரம்

33. 2 / 3.

34. 2. அநுராதபுரம்

35. 4. சோளம்

36. 3. முளைவேர்

37. 3 நரைப்புழுனி

38. 1. கிவி

    படத்தில் காட்டப்பட்டுள்ள பிராணி கடற்பசு

    3. கடற்பசு (குறிப்பு இவ்வினாவினால் வினா இலக்கம் தவறவிடப்பட்டுள்ளதை ஆசிரியர்கள் கவனத்திற் கொள்க..

www.lkedu.lk

39. 1. குருதிச்சோகை

40. புரதம்

41. 3 எருக்கலை

42. 1. பச்சை

43. 3. புழுனி நடை

44. 2. வண்ணத்துப்பூச்சி

45. 3. உள்ளீடு நிரம்பியதாகவும் பளபளப்பாகவும் இருத்தல்.

46. 1

47. 1. களனி கங்கை

48. 3. கம்பளித்தையல்

49. 2. சிங்களவர்

50. 1.. கபிலநிறம்

51. 1. உப்புக்கட்டி சத்தத்துடன் வெடிக்கும்

52. 2. இரும்பும் உருக்கும்

53. 4. பனிக்கட்டி உருகி நீர் மட்டம் அதிகரிக்கும்.

54. 1. உருச்சிறுத்தது, தலைகீழானது, உண்மையானது.

55. 3. கலப்பை

56. 3. சேர்.ஆதர்.சி.கிளார்க்

57. 2. போதை வஸ்து கடத்துதல்.

58. 3. கைவண்டி → தள்ளுதல்

59. 1. எல்லே அடித்தல்

60. பொருத்தமான வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

உதாரணம்

1. நான் விருந்தினர் வருகைக்காக எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டேன்.
2. நான் அவரை அன்புடன் வரவேற்று களைப்பார அருந்துவதற்கு நீர் கொடுத்தேன்.
3. நீண்ட நாட்களுக்கு பின்னர் சந்தித்தமையால் சுக துக்கங்களை விசாரித்தேன்.
4. நான் விடுமுறைகாலத்தில் உருவாக்கிய மூலிகைத்தோட்டம் , வரைந்து வைத்த சித்திரங்கள் , எனது சேகரிப்புகள் , அனைத்தையும் அவரிடம் காட்ட வேண்டும் என எண்ணிக்கொண்டேன்.
5. நான் அவருக்காக எனது அம்மா விதவிதமான உணவுவகைகளை சமைப்பார் என எண்ணி மகிழ்ந்தேன்.
6. நான் விருந்தினர் அறையை சுத்தப்படுத்தி அம்மாவை மகிழ்விக்க எண்ணினேன்.
7. நான் விருந்தினர் வீட்டில் இருக்கும் காலத்தில் அம்மாவை தொந்தரவு செய்ய கூடாது என முடிவெடுத்தேன்.
8. நான் விருந்தினரிடம் நல்ல பெயர் எடுத்துக்கொள்ளும் வகையில் நடந்துக்ககொள்ள தீர்மானித்தேன்.
9. விருந்தினர் எனக்கு தரப்போகும் பரிசுப்பொருள் என்னவாக இருக்கும் என சிந்தித்தேன்.
10. நான் பாடசாலையில் பெற்றுக் கொண்ட வெற்றிகளை அவரிடம் காட்டி என்னை பெருமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என தயாரானேன்.
11. நான் அவரை மகிழ்ச்சியோடும் மன நிறைவோடும் வீட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என எண்ணிக்கொண்டேன்.

www.lkedu.lk

12. நான் அவர் வந்த பிரயாணம் எவ்வாறு அமைந்தது என விசாரித்து அறிந்தேன்.

13. நான் அவரை உறவு முறை சொல்லி இன்முகத்துடன் வரவேற்றேன்.

14. நான் அவரை வீட்டிலுள்ள வரவேற்பறையில் அமரச்செய்து அம்மாவை கூவி அழைத்தேன்.

15. நான் வந்தவரை இன்முகத்தோடு அழைத்து அமர வைத்தேன்.

16. நான் பெற்றோர் வரும் வரை அவருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

17. எனது வீட்டிற்கு புதிதாக ஓர் விருந்தினர் வந்த வேளையில் எனது அம்மா இன்முகத்துடன் வரவேற்றார்.

18. அவருக்கு தேநீர்கொடுத்து அன்போடு உபசரித்தார்.

19. விருந்தினர் குடும்பம் பற்றி கலந்துரையாடி அவரிடம் எங்களையும் அறிமுகப்படுத்தினார்.

www.lkedu.lk